# தமிழகத்தில் முதியோருக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரிப்பு

## ஹெல்பேஜ் இந்தியா ஆய்வில் தகவல்

**சென்னை , ஜூன் 14:** தமிழகத்தில் பெண்கள், முதியோருக்கு எதிரான வன்கொடுமைகள் 16 சதவீதம் அதிகரித்துள்ளதாக ஹெல்பேஜ் இந்தியா அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

சென்னை எழும்பூரில் உலக முதியோர் வன்கொடுமை விழிப்புணர்வு தினத்தை (ஜூன் 15) முன்னிட்டு 'பெண்கள் மற்றும் முதுமை: அறியாமையா அல்லது அதிகாரமா ' என்ற தலைப்பில் அறிக்கை வெளியிடும் நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது. இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது :

இந்தியாவில் பாலின விகிதம் 948/1000. ஆனால், முதியோருக்கான பாலின விகிதம் 1065/1000. இதன்மூலம் முதுமைப்பருவத்தில் பெண்களே அதிகம் உள்ளனர் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.முதுமை காலத்தில் ஆண்களைவிட பெண்கள் சமூக ரீதியாகவும் , பொருளாதார ரீதியாகவும் புறக்கணிக்கப்படுகின்றனர். இதனால் பல்வேறு வன்கொடுமைகளுக்கு பெண்கள் ஆளாக்கப்படுகின்றனர்.

இந்திய மக்கள் தொகை 2021 -இன் படி பெண்கள் 66 கோடி பேர் உள்ளனர். இதில் வயதான பெண்கள் 7 கோடி பேர் உள்ளனர். 2031-இல் மக்கள் தொகையில் 72 கோடி பெண்கள் இருப்பார்கள். இதில் வயதான பெண்கள் 10 கோடிக்கும் மேல் இருக்க வாய்ப்புள்ளது.

54 சதவீத பெண்கள் இன்றளவும் கல்வியறிவில்லாமல் உள்ளனர். 75 சதவீதப் பெண்கள் எந்த சேமிப்பும் இல்லாமலும் , 66 சதவீதப் பெண்கள் எவ்வித சொத்துகளும் இல்லாமல் பொருளாதார ரீதியாக பிறரை சார்ந்திருக்கும் நிலையில் உள்ளனர்.

தமிழகத்தைப் பொருத்தவரை வயதான பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்கொடுமைகள் 16 சதவீதம் உயர்ந்துள்ளது. உடல்ரீதியான வன்முறை 52 சதவீதமும் , வார்த்தை வன்முறை 51 சதவீதமும் நிகழ்த்தப்படுகிறது. இதுபோன்ற வன்முறைகளை பாதிக்கப்பட்டவரின் மகன் 33 சதவீதமும் , உறவினர்கள் 33 சதவீதமும் , 12 சதவீதம் மருமகள்களும் நிகழ்த்துவதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட வயதான பெண்களில் 20 சதவீதம் பேர் தங்களுக்கான சட்டங்கள் மற்றும் குறைதீர் மையங்கள் குறித்த விழிப்புணர்வின்றி காணப்படுகின்றனர். அறிக்கையில் முதியோருக்கான திட்டங்கள், உதவி எண்கள், சட்டங்கள், உரிமைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

'பெண்கள் மற்றும் முதுமை' என்ற தலைப்பிலான அறிக்கையை சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி எஸ். விமலா வெளியிட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்புப் பிரிவு துணை காவல் ஆணையர் ஜி.வனிதா பெற்றுக் கொண்டார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சமூக நலத் துறை மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் துறையின் கூடுதல் இயக்குநர் ஜி.ஜெயலட்சுமி, பிரயாஸ் அறக்கட்டளையின் உறுப்பினர் சத்யா ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# மருத்துவக் கல்வி இயக்கக இலச்சினை மாற்றம்

**சென்னை, ஜூன் 14:** மருத்துவக் கல்வி இயக்ககத்தின் இலச்சினை (லோகோ) புதிதாக மாற்றப்பட்டுள்ளது. அதன்படி, அந்த புதிய இலச்சினையை மருத்துவக் கல்லூரி முதல்வர்களின் ஆவணங்கள், மருத்துவக் கல்வி சான்றிதழ்களில் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மருத்துவத்தைக் குறிக்கும் குறியீட்டுடன் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம் என்ற வாக்கியமும், 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்ற வாசகமும் அந்த இலச்சினையில் இடம் பெற்றுள்ளது.

இது குறித்து மருத்துவக் கல்வி இயக்குநர் சாந்திமலர், சம்பந்தப்பட்ட மருத்துவக் கல்லூரி முதல்வர்கள், துணை இயக்குநர்கள் உள்ளிட்டோருக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கை:

அனைத்து மருத்துவக் கல்லூரி முதல்வர்களும், தங்களது லெட்டர் பேடில் புதிய இலச்சினையைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

அதேபோல், மருத்துவம், துணை மருத்துவப் படிப்புகளுக்கான சான்றிதழ்களிலும் அதையே பயன்படுத்த வேண்டும்.

தொடர் மருத்துவக் கல்வி நிகழ்வுகள், துறைசார் பிற நிகழ்வுகளிலும் புதிய இலச்சினையைப் பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸுக்கு சிறந்த ஆளுநர் விருது

**லண்டன், ஜூன் 14:** இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸுக்கு லண்டனில் செவ்வாய்க்கிழமை நடந்த நிகழ்ச்சியில் நிகழாண்டின் சிறந்த ஆளுநர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.



லண்டனில் வழங்கப்பட்ட விருதுடன் ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ்.

உலகளவில் மத்திய வங்கிகள் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டு அமைப்புகள் எதிர்கொள்ளும் சாவல்களை ஆராயும் 'சென்ட்ரல் பேங்கிங்' அமைப்பு, ஆண்டுதோறும் சிறந்து செயல்படும் மத்திய வங்கிகளின் ஆளுநருக்கு விருது வழங்கி கௌரவித்து வருகிறது.

அதன்படி, சவாலான சிக்கல்களை எதிர்கொண்டது, உலகின் முன்னணி பரிவர்த்தனை அமைப்பை மேற்பார்வையிடுவது, கடினமான காலங்களில் இந்திய பொருளாதாரத்தை உறுதியாக வழிநடத்தியது மற்றும் அவரின் நன்கு வடிவமைக்கப்பட்ட சொற்றொடர்களுக்காக சக்திகாந்த தாஸுக்கு நிகழாண்டின் சிறந்த ஆளுநர் விருது கடந்த மார்ச் மாதத்தில் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், லண்டனில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வில் ஆளுநர் சக்திகாந்த தாஸுக்கு சிறந்த ஆளுநர் விருது வழங்கப்பட்டது. தொடர்ந்து, 'நிலையற்ற காலத்தில் மத்திய வங்கி-இந்தியாவின் பார்வை' என்ற தலைப்பில் அவர் பேசுகையில், 'நாட்டின் நிதி அமைப்பின் மையமாக இருந்து செயல்படும் மத்திய வங்கிகள், சில சமயங்களில் தங்களின் பாரம்பரியத்தைக் காட்டிலும் கூடுதலாகப் பணியாற்றும் கட்டாயத்துக்குத் தள்ளப்படும்.

கடந்த 3 ஆண்டுகளில் கரோனா பெருந்தொற்று, ரஷிய-உக்ரைன் போர் உள்பட பல சிக்கல்களுக்கு இடையே மத்திய வங்கிகள் பணியாற்றி வருகின்றன. இந்தச் சிக்கல்களால் மோசமடைந்த பொருளாதாரத்துக்கு ஊக்கமளிக்கவும், பணவீக்கத்தை எதிர்த்துப் போராடவும் மத்திய வங்கிகள் விரைவாக திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டியிருந்தது.

நடப்பு நிதியாண்டுக்கான இந்தியாவின் பணவீக்கத்தின் கணிப்பு 5.1 சதவீதம் எனக் குறைவாக இருந்தாலும், எங்களின் இலக்கை விட அதிகமாகவே உள்ளது. எனினும், தற்போதைய திட்டத்தின்படி இந்தியாவின் பணவீக்க செயல்முறையானது மெதுவாகவும், நீண்டதாகவும் இருக்கும். பணவீக்க இலக்கான 4 சதவீதத்தை இந்தியா குறுகிய காலத்தில் அடையும்' என்றார்.

# சட்டவிரோத இடம்பெயர்வைத் தடுக்க இந்தியா–வங்கதேச எல்லையை மூட திட்டம்

**புது தில்லி, ஜூன் 14:** இந்தியர்கள் வங்கதேசத்துக்கும், வங்கதேசத்தைச் சேர்ந்தவர்கள் இந்தியாவுக்கும் சட்டவிரோதமாக இடம்பெயர்வதைத் தடுக்க இரு நாட்டு எல்லையை மூட திட்டமிடப்பட்டு வருவதாக வங்கதேச எல்லைப் பாதுகாப்புப் படைத் தலைவர் நஜ்முல் ஹசன் புதன்கிழமை தெரிவித்தார்.

இந்தியா-வங்கதேச எல்லைப் பாதுகாப்பு தொடர்பாக ஆண்டுக்கு இரு முறை நடைபெறும் பேச்சுவார்த்தை, தில்லியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் புதன்கிழமை வரை நடைபெற்றது.

இதையடுத்து இந்திய எல்லைப் பாதுகாப்புப் படைத் தலைவர் (பொறுப்பு) சுஜாய் லால் தாவ்சென், வங்கதேச எல்லைப் பாதுகாப்புப் படைத் தலைவர் நஜ்முல் ஹசன் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்கள் மீது தாக்குதல் அல்லது இதர எல்லை தாண்டிய குற்றங்களில் ஈடுபடும் கடத்தல்காரர்கள் மற்றும் சமூக விரோதிகள், பாதுகாப்புப் படையினரின் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்படும் சம்பவங்களைக் குறைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இருவரும் தெரிவித்தனர்.

பின்னர் நஜ்முல் ஹசன் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'இந்தியாவும் வங்கதேசமும் பொதுவான கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளன. இந்தியர்களுக்கு வங்கதேசத்திலும், வங்கதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்தியாவிலும் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் உள்ளனர். இதனால் இருதரப்பினரும் இந்தியா மற்றும் வங்கதேசத்துக்கு சட்டவிரோதமாக இடம்பெயர்கின்றனர்.

இது பிரச்னையாக உள்ள நிலையில், சட்டவிரோத இடம்பெயர்வை தடுக்க இருநாட்டு எல்லையை மூடுவது, இருநாட்டு எல்லைப் பாதுகாப்புப் படைகளும் ஒன்றிணைந்து எல்லையில் ரோந்துப் பணியில் ஈடுபடுவது குறித்து திட்டமிடப்பட்டு வருகிறது' என்று தெரிவித்தார்.

இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை வெளியிட்ட அறிக்கையில், 'இந்தியா-வங்கதேச எல்லையில் 5 வளர்ச்சி திட்டங்களுக்கான பணிகளைக் கூட்டாக தொடங்க இருநாட்டு எல்லைப் பாதுகாப்புப் படைகள் முடிவு செய்துள்ளன. பாலம் அமைத்தல், சாலைகளைப் பழுது பார்த்தல் மற்றும் அஸ்ஸாம், மேற்கு வங்கம், மிஸோரம், மேகாலயம், திரிபுரா ஆகிய ஐந்து மாநிலங்களையொட்டிய எல்லைப் பகுதிகளில் உள்ள தடுப்புச் சுவர்களை வலுப்படுத்துதல் ஆகியவற்றுடன் அந்தவளர்ச்சித் திட்டங்கள் சம்பந்தப்பட்டவையாகும். இருநாட்டு எல்லையில் போதைப் பொருள், இந்திய கள்ளநோட்டுகள், தங்கம் உள்ளிட்டவை கடத்தப்படுவது போன்ற எல்லை தாண்டிய குற்றங்களைத் தடுக்க கூடுதல் விழிப்புடன் இருக்க உறுதி ஏற்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


தில்லியில் புதன்கிழமை நடைபெற்ற பேச்சுவார்த்தையில் பங்கேற்ற இந்திய எல்லைப் பாதுகாப்புப் படைத் தலைவர் (பொறுப்பு) சுஜாய் லால் தாவ்சென், வங்கதேச எல்லைப் பாதுகாப்புப் படைத் தலைவர் நஜ்முல் ஹசன் (வலது).

EVA S

# பொது சிவில் சட்டம்: புதிதாக கருத்துகளை வரவேற்கும் சட்ட ஆணையம்

**புது தில்லி, ஜூன் 14:** பொது சிவில் சட்டத்தின் அவசியம் குறித்தும் புதிதாக ஆராயவும், அதன் மீதான பொதுமக்கள் மற்றும் மத அமைப்புகளின் கருத்துகளைக் கேட்கவும் சட்ட ஆணையம் தீர்மானித்துள்ளது.

விருப்பமுள்ளவர்கள் இதுதொடர்பான அறிவிக்கை வெளியானதிலிருந்து 30 நாள்களுக்குள் கருத்துகளைச் சமர்ப்பிக்கலாம் என்று சட்ட ஆணையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் பல்வேறு மதங்கள் தங்களுக்கென மதச் சட்டங்களைப் பின்பற்றுகின்றன. அவற்றுக்குப் பதிலாக எல்லோரும் பின்பற்றும் வகையில் பொது சிவில் சட்டம் கொண்டுவர வேண்டும் என்று பாஜக பல ஆண்டுகளாக கூறி வருகிறது.

அதாவது, அனைத்து மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் திருமணம், விவாகரத்து, தத்தெடுத்தல், சொத்துரிமை தொடர்பான நாடு முழுமைக்கும் ஒரே சட்டமாக பொது சிவில் சட்டத்தைக் கொண்டுவர பாஜக முயற்சித்து வருகிறது. இதற்கு ஆதரவும் எதிர்ப்பும் எழுந்துள்ளன.

அதனைத் தொடர்ந்து, இந்தியாவில் பொது சிவில் சட்டம் கொண்டு வருவதற்கான சாத்தியகூறுகள் குறித்து ஆய்வு செய்யுமாறு சட்ட ஆணையத்தை மத்திய சட்டத்துறை அமைச்சகம் கேட்டுக் கொண்டது.

அதனடிப்படையில் கருத்துகளைக் கேட்டறிந்த 21-ஆவது சட்ட ஆணையம், அதுதொடர்பான ஆலோசனை அறிக்கையை கடந்த 2018-ஆம் ஆண்டு வெளியிட்டது.

இருந்தபோதும், தொடர் எதிர்ப்பு, நீதிமன்ற வழக்குகள் காரணமாக இந்த விவகாரத்தில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்க முடியாத நிலை உருவானது.

இந்த நிலையில், 21-ஆவது சட்ட ஆணையத்தின் இந்த ஆய்வறிக்கை வெளியிடப்பட்டு 3 ஆண்டுகளுக்கு மேல் கடந்துவிட்டது மற்றும் இந்த விவகாரம் தொடர்பான பல்வேறு நீதிமன்ற உத்தரவுகள் ஆகியவற்றின் அடிப்படையில், பொது சிவில் சட்டத்தின் அவசியம் மற்றும் அதன் மீது பொதுமக்கள் மற்றும் மத அமைப்புகளிடமிருந்து புதிதாக கருத்துகளைக் கேட்கவும் தற்போதைய 22-ஆவது சட்ட ஆணையம் தீர்மானித்துள்ளது.

22-ஆவது சட்ட ஆணையத்தின் பணிக் காலம் 3 ஆண்டுகள் நீட்டிக்கப்பட்டுள்ள நிலையில், மத்திய சட்டத்துறை அமைச்சகத்தின் பரிந்துரையின் அடிப்படையில் பொது மக்களிடம் கருத்துகள் கேட்கும் பணியைத் தொடங்கியுள்ளது.

# ஜம்முவில் மீண்டும் 5 முறை நிலநடுக்கம்: பள்ளிகள் மூடல்

**தோடா/ ஜம்மு, ஜூன் 14:** ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் ஜம்மு பகுதியில் 5.4 ரிக்டர் அளவில் செவ்வாய்க்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்ட நிலையில், அதைத் தொடர்ந்து 5 முறை நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து, தோடா, கிஷ்த்வார் ஆகிய மலை மாவட்டங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பள்ளிகள் மூடப்பட்டன.

இந்த நிலநடுக்கங்களில் உயிரிழப்போ, பொருள்சேதமோ ஏற்பட்டதாக இதுவரை தகவல் இல்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தோடா மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை பிற்பகலில் 5.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் தாக்கத்தால், தோடா மற்றும் கிஷ்த்வார் மாவட்டங்களில் பல கட்டடங்களில் விரிசல் விழுந்தன. 2 பள்ளி மாணவர்கள் உள்பட 5 பேர் காயமடைந்தனர்.


தோடாவில் நிலநடுக்கத்தால் சேதமடைந்த அலுவலகம்.

இந்நிலையில், தோடா மாவட்டத்தில் புதன்கிழமை அதிகாலை 2.20 மணியளவில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. பூமிக்கடியில் 10 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவுகோலில் 4.3 புள்ளிகளாக பதிவானது.

பின்னர், ரியாசி மாவட்டத்தின் கத்ரா பகுதியில் 2.8 ரிக்டர் அளவில் அதிகாலை 2.43 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் மையப்புள்ளி, பூமிக்கடியில் 5 கி.மீ. ஆழத்தில் இருந்தது.

அடுத்ததாக, தோடா மாவட்டத்தில் காலை 7.56 மணியளவில் 3.5 ரிக்டர் அளவிலும், பின்னர் கிஷ்த்வாரில் காலை 8.29 மணியளவில் 3.3 ரிக்டர் அளவிலும் நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

இவை, பூமிக்கடியில் முறையே 10 கி.மீ., 5 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக தேசிய நிலநடுக்கவியல் மையம் தெரிவித்தது.

அடுத்தடுத்து ஏற்பட்ட இந்த நிலநடுக்கங்களால் மக்கள் பீதியடைந்தனர். தோடா, கிஷ்த்வார் மாவட்டங்களில் மாணவர்களின் பாதுகாப்பு கருதி அனைத்து பள்ளிகளும் மூடப்பட்டன.

முன்னதாக, ஜம்மு பகுதியில் கடந்த 2013-இல் தொடர்ந்து 70 நாள்களுக்கு அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

**குஜராத்தில் நில அதிர்வு:** குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் 3.5 ரிக்டர் அளவில் புதன்கிழமை மாலை 5 மணியளவில் நில அதிர்வு ஏற்பட்டது. இதில், உயிர்ச்சேதமோ, பொருள்சேதமோ ஏற்பட்டதாக தகவல் இல்லை.

நிலநடுக்க அபாயம் மிகுந்த பகுதியில் கட்ச் மாவட்டம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



# சிக்குன்குன்யா | ஒரே தவணையாக செலுத்தும் பாதுகாப்பான தடுப்பூசி கண்டுபிடிப்பு

**புது தில்லி, ஜூன் 14:** சிக்குன்குன்யா நோய் பாதிப்புக்கு ஒரே தவணையில் செலுத்தக் கூடிய விஎல்ஏ-1553 தடுப்பூசி பாதுகாப்பானது என கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக 'லான்செட் ஜர்னல்' மருத்துவ ஆய்வு இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது முறையாக நடத்தப்பட்ட சோதனையில் இந்த முடிவு எட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொசுக்களால் பரவும் சிக்குன்குன்யா நோய் பாதிப்பு ஆப்பிரிக்கா, ஆசியா, அமெரிக்காவின் பல்வேறு இடங்களில் அதிகரித்து வருகிறது.

நான்கு முதல் எட்டு நாள்களுக்கு கடுமையான காய்ச்சல் அறிகுறியுள்ள சிக்குன்குன்யா காரணமாக நோயாளிகளுக்கு தலைவலி, சோர்வு, வாந்தி, கடுமையான தசை மற்றும் மூட்டு வலி ஏற்படும்.

சிலருக்கு வாரக் கணக்கிலோ, மாதக் கணக்கிலோ, வருடக் கணக்கிலோ மூட்டு வலி தொடர்கிறது. அந்த நோயால் உயிரிழப்பு அதிகம் இல்லை என்றாலும், வயதானவர்களுக்கும் சிசுக்களுக்கும் இது கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.

சிக்குன்குன்யாவுக்கு தற்போது வரை எந்தவித அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசியோ, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் சிகிச்சை முறையோ இல்லை.

இந்த நிலையில், தற்போது முதல் முறையாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள விஎல்ஏ-1553 தடுப்பூசி சிக்குன்குன்யா பாதிப்பு அதிகரித்திருக்கும் நாடுகளில் உள்ளவர்களுக்கும் அந்த நாடுகளுக்கு பயணம் மேற்கொள்பவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், பிரான்ஸைச் சேர்ந்த பயோடெக் நிறுவனமான வால்நேவா தயாரித்துள்ள இந்த தடுப்பூசிக்கு, சிக்குக்குன்யா அதிகம் காணப்படும் நாடுகளில் சோதனை நடத்தப்படாததால், அந்தப் பகுதி மக்களுக்கு எந்த அளவுக்கு நோய் பாதிப்பில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் என்று கூற முடியாது என்றும் நிபுணர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

விஎல்ஏ-1553 தடுப்பூசி

இந்தத் தடுப்பூசியைச் செலுத்தியவுடன் நோய் எதிர்ப்புச் சக்தி சிறந்த அளவில் அதிகரிப்பதாகவும், திடீரென சிக்குன்குன்யா நோய் அதிக அளவில் பரவினால் அதைக் கட்டுப்படுத்த இந்த தடுப்பூசி உதவும் என்றும் வயதானவர்களுக்கு இந்த தடுப்பூசி நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது என்றும் விஎல்ஏ-1553 தடுப்பூசி நிறுவனத்தின் மேலாளர் மார்டினா ஷ்னைடர் தெரிவித்தார்.

அமெரிக்காவில் 43 இடங்களில் 4,115 இளைஞர்களுக்கு விஎல்ஏ-1553 தடுப்பூசி செலுத்தப்பட்டு சோதனை நடத்தப்பட்டது. அதில் ஒரு வாரம், 28 நாள்கள், 3 மாதம், 6 மாதம் இடைவெளியில் நோய் எதிர்ப்பு சக்தி பரிசோதிக்கப்பட்டது.

ஒரு முறை செலுத்தப்பட்ட தடுப்பூசியிலேயே 99 சதவீதம் பேருக்கு நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரித்தது. வயது வரம்பின்றி நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்தது தெரியவந்தது.

குறைவான நோய் எதிர்ப்பு சக்தி உள்ளவர்களுக்கும் கர்ப்பிணிகள், சிறுவர்களுக்கும் சிக்குன்குன்யா தடுப்பூசி செலுத்தலாம். இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான பரிசோதனை பிரேஸிலில் நடைபெற்று வருகிறது.

சிக்குன்குன்யா பெருந்தொற்றாகப் பரவுவதற்கு முன் தடுப்பூசி தயாரிக்கப்பட்டுள்ளது நல்ல செய்தி என்று தீநுண்மி பகுப்பாய்வு, தடுப்பூசி ஆராய்ச்சி மற்றும் இஸ்ரேல் டெகோனஸ் மருத்துவ மையத்தின் நிபுணர் கேதரின் ஸ்டீபன்சன் தெரிவித்தார் என லான்செட் ஆய்வு இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு முடிகள் வெளியானதையடுத்து, பல்வேறு நாடுகளில் விஎல்ஏ-1553 சிக்குன்குன்யா தடுப்பூசியை விற்பனை செய்ய அனுமதி கோரி வால்நேவா நிறுவனம் விண்ணப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
[https://www.evastaliniasacademy.in/](https://www.evastaliniasacademy.in/)
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# நவீனமயமாகும் அண்டை நாட்டு ராணுவம்!

ஒரு காலத்தில் குட்டைக்கழிவு ராணுவம் என்று வர்ணிக்கப்பட்ட சீனாவின் மக்கள் விடுதலை ராணுவம் (பிஎல்ஏ) இன்று உலகின் மிகச்சிறந்த தொழில்முறையிலான தாக்குதல் படையாக மாறி வருகிறது.

'குறைவான ஆயுதம் குறைவான படைவீரர்கள்' என்ற கோட்பாடே சீன ராணுவத்தை மேம்படுத்தத் தடையாக இருந்து வந்தது. 1993-ஆம் ஆண்டு வரையிலும் கூட சீன ராணுவத்தின் நவீனமயமாக்கும் நடவடிக்கைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டே வந்தன. சீன கம்யூனிச அரசின் நிறுவனரான மா சேதுங், உள்கட்சித் தலைமைக்கு சவால் வந்துவிடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வாலும், மாறுபட்ட கொள்கை முரண்பாடுகளால் சிக்கல்கள் நேரிட்டுவிடக் கூடாது என்பதாலும் ராணுவம் மீது உறுதியான பிடியை வைத்திருந்தார்.

மாவோவுக்குப் பிறகு, சீன அரசின் ராணுவம் குறித்த பார்வையில் மாற்றம் வந்தது. டெங் ஜியோ பிங் அதிபராக இருந்த போது, ராணுவத்தின் தொழில்முறை முன்னேற்றம் குறித்த அரசின் சந்தேகப்பார்வை குறைந்தது. ஆயினும் ராணுவம் மீதான பிடியை சீன கம்யூனிஸ்ட் கட்சி தளர்த்திக் கொள்ளவில்லை.

1990-1991-களில் நடந்த வளைகுடாப் போரும், 1995-1996-இல் நிகழ்ந்த தைவான் நீரிணை விவகாரமும் ராணுவத்தை தொழில்முறையில் மேம்படுத்தியாக வேண்டியதன் அவசியத்தை சீன அரசுக்கு உணர்த்தின. வளைகுடாப் போர் போன்ற சிக்கல்களை எதிர்கொள்ள பிஎல்ஏ-வை ஆயத்தமாக்குவதற்காக, ஆயுதங்களின் செயல்திறனைப் பெருக்குதல், அதிநவீனத் தொழில்நுட்பங்களைக் கையாளுதல் ஆகியவற்றின் தேவை உணரப்பட்டது. அப்போது உள்ளூர் போர்களை நவீனக் கட்டுப்பாடுகளுடன் நடத்தலாம் என்ற சிந்தனை காலாவதியானது.

அன்று முதல் சீன ராணுவத்தை வலுப்படுத்தும் ஒருங்கிணைந்த முயற்சிகள் தொடங்கின. 1997-ஆம் ஆண்டுக்குப் பிறகு சீன அரசின் நிதிநிலை அறிக்கையில் ராணுவத்துக்கான நிதி ஒதுக்கீடு முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரிக்கப்பட்டது. அதிலும் 2011-ஆம் ஆண்டு வரை (ஓராண்டு தவிர) ராணுவத்திற்கான நிதி ஒதுக்கீடு இரட்டை இலக்க சதவீதத்தில் இருந்தது. அதன் விளைவாக பிஎல்ஏ விரைவில் நவீனமயமானது.

சீனாவின் பிஎல்ஏ தனக்கென ராணுவ வியூக நெறிமுறைகளை வடிவமைத்துள்ளது. அதுவே ராணுவத்தின் திட்டங்கள், கொள்கைகள் அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளது. 1993-இல் பிஎல்ஏ-வின் தலைமைத் தளபதியாக இருந்த ஸாங் வானியான், அப்போதைய ராணுவ வியூகத்தை சுருக்கமாகக் குறிப்பிட்டபோது, 'நமது வியூகம், நாம் யாருடன் போரிட வேண்டும், எங்கே போரிட வேண்டும், எவ்வாறு போரிட வேண்டும் ஆகிய கேள்விகளுக்கு பதில் அளிப்பதாக இருக்க வேண்டும்' என்றார்.

சீன மக்கள் குடியரசின் (பிஆர்சி) படைபலம் குறித்து அமெரிக்க காங்கிரஸ் அவையில் அந்நாட்டின் பாதுகாப்புத் துறையால் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்திர அறிக்கையில், பிஎல்ஏ-வின் வியூக முறைகளில் பெரும் பங்கைப் பெற்றிருப்பது செயலூக்கமுள்ள தற்காப்பு மட்டுமே எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.


மனீஷ் திவாரி

அந்த செயலூக்கமுள்ள தற்காப்புக் கோட்பாட்டின் பிரதான அம்சங்கள்: பிஎல்ஏ யாரையும் முதலில் தாக்காது. ஆனால் பிறர் தாக்கினால் தகுந்த பதிலடி கொடுக்க ராணுவம் அனுமதிக்கப்படும். அதேபோல, தற்காப்புக்காக முன்னெச்சரிக்கைத் தாக்குதல்களையும் பிஎல்ஏ மேற்கொள்ளலாம்.

எல்லைகளில் தனது நிலைகளை ஸ்திரப்படுத்திக் கொள்வதும், அதை அண்டை நாடுகளுக்கு சமிக்ஞையாக வெளிப்படுத்துவதும் அவசியம். எதிரி நாட்டுப் படைகளின் பலவீனங்களை மையப்படுத்தி, தோழமைச் சூழலும் ஒத்து வருகையில் தாக்குதல்களை நடத்த பிஎல்ஏ அனுமதிக்கப்படும்.

இந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில்தான் சீனாவின் ராணுவச் செயல்பாடுகள் அமைந்துள்ளன.

1990-களுக்கு முன்னர் சீனாவின் ராணுவ பட்ஜெட், தைவானின் ராணுவ பட்ஜெட்டை விடக் குறைவாகவே இருந்தது. 1990-களின் பிற்பகுதியிலிருந்து அதன் ராணுவ நிதி ஒதுக்கீடு அதிகரித்தது. இன்று உலக நாடுகளில் ராணுவத்திற்கு அதிகம் செலவழிக்கும் நாடுகளின் பட்டியலில் அமெரிக்காவுக்கு அடுத்ததாக சீனா இருக்கிறது.

**2022-இல் புதிய விமானந்தாங்கிக் கப்பலை சீனா தயாரித்திருக்கிறது. இந்தக் கப்பல், மின்காந்த சக்தியில் இயங்கும் தொழில்நுட்பத்தால் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டிருக்கிறது. தைவானின் அருகிலுள்ள சீன மாகாணமான பியூஜியனின் பெயரே இந்த விமானந்தாங்கிக் கப்பலுக்குச் சூட்டப்பட்டிருக்கிறது.**

இப்பட்டியலில் ஜப்பான், பிரான்ஸ், ரஷியா, பிரிட்டன் போன்ற நாடுகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது சீனா. இன்றைய சீனாவின் ராணுவ பட்ஜெட், 17 இந்தோ-பசிபிக் நாடுகளின் ராணுவங்களுக்கு அளிக்கப்படும் ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீட்டை விட அதிகம்.

சீன அரசு 2023-ஆம் ஆண்டில் பிஎல்ஏ-வுக்கு அளித்துள்ள வருடாந்திர நிதி ஒதுக்கீட்டின் அளவு 224.79 பில்லியன் அமெரிக்க டாலர். (சுமார் ரூ.18,43,278 கோடி). இது கடந்த நிதியாண்டை விட 7.2 % அதிகம். கடந்த எட்டாண்டுகளாக இதே போன்று ஒற்றையிலக்க சதவீதத்தில் ராணுவ நிதி ஒதுக்கீடு அதிகரித்து வந்துள்ளது. கடைசியாக 2015-இல் 10.1 % என்ற இரட்டை இலக்கத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதே சமயம், அறிவிக்கப்பட்ட பட்ஜெட் தொகைக்கும், ராணுவத்தில் செலவழிக்கப்படும் தொகைக்கும் பெருத்த வேறுபாடு இருப்பதாகவும், பட்ஜெட் ஒதுக்கீட்டை விட இரு மடங்கு அதிகமாக ராணுவத்திற்குச் செலவழிக்கப்பட்டிருப்பதாகவும் அமெரிக்க பாதுகாப்புத் துறை அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

சீனாவுடன் ஒப்பிட்டால் இந்தியாவின் ராணுவத்திற்கான நிதி ஒதுக்கீடு மிகவும் குறைவே. 2023-24 நிதியாண்டில் இந்திய அரசு ராணுவத்திற்கு ஒதுக்கீடு செய்திருப்பது 72.6 பில்லியன் டாலர் (ரூ. 5,95,320 கோடி) மட்டுமே.

அதிகப்படியான நிதி ஒதுக்கீடு காரணமாக, பிஎல்ஏ புதிய திறன்களையும், மேம்பாட்டையும் பெற்று வருகிறது. ஒருங்கிணைந்த கூட்டுறவும் தொழில்நுட்பம், துல்லியமான தாக்குதல்களை நிகழ்த்தும் திறன், நீண்ட தொலைவில் உள்ள இலக்குகளை விமானம், கப்பலிலிருந்து தாக்கும் திறன், நெடிய போர்ப் பயண ஏற்பாடு ஆகியவற்றில் பிஎல்ஏ நிபுணத்துவம் பெற்று வருகிறது.

ஏற்கெனவே, செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தில் முதலீடு, ஆளில்லா விமானங்கள் (யுஏவி), திறன் வாய்ந்த கணினி வலைப்பின்னல் கட்டமைப்பு ஆகியவற்றின் வாயிலாக, உளவுத் தகவல்களை கிரகித்தல், ராணுவச் செயல்பாடுகளைத் திட்டமிடல், போர்க்களத்தில் சூழலுக்கேற்ப முடிவெடுத்தல் ஆகிய பணிகளில் பிஎல்ஏ தனது திறமைகளைப் பெருக்கிக் கொண்டுள்ளது.

இதில் சீனாவின் அண்மைக்கால முன்னேற்றமாக, விமானந்தாங்கிக் கப்பல்களை உள்நாட்டிலேயே சிறப்பாக வடிவமைத்திருப்பதைக் குறிப்பிடலாம். பழைய சோவியத் ஒன்றியத்திடமிருந்து பெறப்பட்ட பயன்படுத்தப்பட்ட விமானந்தாங்கிக் கப்பல்களை புதுப்பித்து முதல் முதலாக 'லியாவோனிங்' விமானந்தாங்கிக் கப்பலை 1999-களில் சீனா தயாரித்தது. 2017-இல், உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட 'ஷான்டோங்' விமானந்தாங்கிக் கப்பலை சீனா அறிமுகம் செய்தது.

2022-இல் 'பியூஜியன்' என்ற புதிய விமானந்தாங்கிக் கப்பலை சீனா தயாரித்திருக்கிறது. இந்தக் கப்பல், மின்காந்த சக்தியில் இயங்கும் தொழில்நுட்பத்தால் விமானங்களைக் கட்டுப்படுத்தும் வகையில், உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டிருக்கிறது. தைவானின் அருகிலுள்ள சீன மாகாணமான பியூஜியனின் பெயரே இந்த விமானந்தாங்கிக் கப்பலுக்குச் சூட்டப்பட்டிருக்கிறது.

வரும் ஆண்டுகளிலும் இதே வேகத்துடன் பிஎல்ஏ நவீனமயமாக்கம் நடைபெறும் என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. எனினும் கீழ்க்கண்ட உள்நாட்டு அரசியல், வெளிநாட்டு நிகழ்வுகளின் தாக்கத்தால் இதில் மாற்றம் நிகழவும் வாய்ப்பிருக்கிறது.

முதலாவதாக, தைவான் விவகாரம் பிஎல்ஏ-வின் நவீனமயமாக்கத்தில் பெரும்பங்கு வகித்து வந்துள்ளது. இந்த விவகாரத்திற்குத் தீர்வு காணப்பட்டுவிட்டால் பிஎல்ஏ-வின் முக்கியத்துவம் குறையலாம். எனினும், தைவான் விவகாரத்தில் உடனடித் தீர்வுக்கான வாய்ப்புகள் குறைவே. தைவான் மீதான சீனாவின் கட்டுப்பாடு நிலவுவது அமைதியான ஒப்பந்தத்தாலா, ராணுவ பலத்தாலா என்பதன் அடிப்படையிலேயே ராணுவத்தின் தேவை மதிப்பிடப்படும்.

இரண்டாவதாக, தைவான் நீரிணை விவகாரம் அல்லாத பிற விவகாரங்களும் ராணுவத்தின் தேவையை அதிகரிக்கின்றன. முப்படைகளின் முதல் நிலை, இரண்டாம் நிலைப் பிரிவுகளுக்கு ராணுவ நிதி ஒதுக்கீட்டை முன்னுரிமை அடிப்படையில் முறைப்படுத்துவது அவசியம். குறிப்பாக, இந்திய எல்லையை ஒட்டிய பகுதிகளில் பிஎல்ஏ செலுத்தும் கவனம், கொரிய தீபகற்பத்தில் செலுத்துவதைவிட அதிகமாக உள்ளது.

இதற்குப் பொருத்தமாகவே தற்போதைய சீன அதிபர் ஜி ஜின்பிங், 'முழுமையான தேசிய பாதுகாப்புக் கருத்து' என்ற கோட்பாட்டை முன்வைத்திருக்கிறார். நாட்டை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியைக் காப்பது, பலதரப்பட்டவர்களின் தேவைகளை நிறைவேற்றுவது ஆகியவற்றில் அவர் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இது கிட்டத்தட்ட 1980-களில் சோவியத் ரஷியாவின் ராணுவம் கொண்டிருந்த திட்டங்களைப் போன்றது. சோவியத் ராணுவத்தில் அப்போது முப்படைகளும் போர்களை நடத்த சுதந்திரம் அளிக்கப்பட்டிருந்தது.

இறுதியாக, எதிர்காலப் போர்முறைகளின் இயல்பே வருங்காலத்தில் ராணுவ நவீனமயமாக்கலைத் தீர்மானிக்கும். 2019-ஆம் ஆண்டில் வடிவமைக்கப்பட்ட சீன ராணுவ நெறிமுறைகள், தகவல் போரில் வெல்ல வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இருந்தன. எனினும், பிஎல்ஏ-வின் வியூகம் தற்போது அறிவாற்றல் போரில் தன்னை மேம்படுத்திக் கொள்வதில் இருப்பதாகத் தெரிகிறது.

தொழில்நுட்பரீதியான மேம்பாட்டிற்கு பிஎல்ஏ தயாராகிறது. இதற்காக, சீனாவின் அறிவியல் - தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைப்புகளுடன் பிஎல்ஏ இணைந்து செயல்படுகிறது. செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ், ட்ரோன் தொழில்நுட்பம், ஒலியைவிட அதிவேகமாக இயங்கும் ராக்கெட் தொழில்நுட்பம், நானோ தொழில்நுட்பம், உயிரித் தொழில்நுட்பம் போன்றவற்றில் பிஎல்ஏ கூடுதலான கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

கட்டுரையாளர்:
**முன்னாள் மத்திய அமைச்சர்.**

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
[https://www.evastaliniasacademy.in/](https://www.evastaliniasacademy.in/)
**Contact Number - +91-8678969915, +91-9940332851**